**என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் - 2020**

---

**1.1 அபிப்பிராயம்**

என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்டின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்திட்டத்தை மறுசீரமைப்பதற்காக முன்னணி முகாமையாளராக கம்பனி நியமிக்கப்பட்டது. இது தொடர்பாக திறைசேரியிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 246,939,587 ஆக காணப்பட்டதுடன் அத்தகைய மீதியில் 2020 இன் இறுதியில் உள்ளவாறு ரூபா 88,939,587 தொகை நிலுவையாக உள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டது. இதுவரை பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். சமீபத்திய கோரிக்கையானது 2021.07.20 இல் அனுப்பப்பட்டது. | கம்பனி திறைசேரியிலிருந்து பெறவேண்டிய தொகையை அறவீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கம்பனியின் தேறியலாபம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 515 மில்லியனிலிருந்து 2020 ஆம் ஆண்டில் ரூபா 608 மில்லியன் வரை அதிகதரித்திருந்தது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 93 மில்லியன் அல்லது 18 சதவீத முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்க பிணைமுறிகளின் தேறிய வட்டி வருமானம் ரூபா 150.2 மில்லியன் அல்லது 35 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைதல் சதவீதத்துடன் மதிப்பிடப்பட்டு இத் தலைப்பின் கீழ் அவதானிப்புக்கள் காட்டப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாடு சாதகமானது/ (பாதகமானது) (ரூபா) | வேறுபாடு (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 51,867,492 | 4 | அரசாங்க பிணைமுறிகள் மீதான முதலீட்டின் அதிகரிப்பு. |
| வட்டி செலவினம் | (98,319,993) | (10) | மீள்கொள்வனவு உடன்படிக்கை மீதான கட்டணங்கள் குறைக்கப்பட்டமை. |
| தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | (7,218,871) | (13) | ஆண்டின் போது ஆறு நம்பிக்கைப்பொறுப்பாளர் (trustee) உடன்படிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் குறைக்கப்பட்டிருந்தது. |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு | (3,428,850) | (190) | 2019 இல் ரூபா 605,579 ஆக காணப்பட்ட குத்தகை கட்டிடத்திற்கான பெறுமானத்தேய்வு 2020 இல் ரூபா 3,633,473 ஆகும். (2019 திசெம்பரில் புதிய குத்தகைக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

துறை விகிதங்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு உள்ளன.

| விபரம் | துறை | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2020 | 2019 | 2020 | 2019 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (%) | 30.5 | 28.5 | 16.96 | 17.01 |
| சொத்து மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (%) | 7.6 | 6 | 5.48 | 4.78 |
| ஆபத்து மதிப்பிலான (Risk Weighted) மூலதன போதுமை விகிதம் (ஆர்டபிள்யூசீஏஆர்) (%) (ஆகக்குறைந்தது 10%) | 27 | 27.6 | 35.01 | 27.88 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (1) | கம்பனி ஊழியர் ஆட்சேர்ப்பு திட்டத்தை கொண்டிருக்காததுடன் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.2 மற்றும் 9.3 ஆம் பந்திகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | NSB FMC கம்பனியின் அமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை நிதி அமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்துள்ளது. முதன்மை வணிக கம்பனியாக NSB FMC ஆனது HR கொள்கையை (தொடர் திட்டம் உட்பட) கொண்டுள்ளதுடன் அனைத்து ஆட்சேர்ப்புக்களும், பதவி உயர்வுகளும், ஊதியங்களும் BHRRC மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கொள்கைக்கிணங்க மேற்கொள்ளப்படுகின்றன. | அரச உடமையாக்கப்பட்ட கம்பனியொன்றாக பிஈடி சுற்றறிக்கைகளுக்கு கம்பனி இணங்குதல் வேண்டும். |
| (2) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 24 மற்றும் 20 ஆக காணப்பட்டனர். நான்கு வெற்றிடங்கள் முதலீட்டு உதவியாளர் நிலையிலுள்ள 3 பதவிகளையும் முகாமைத்துவ நிலையிலுள்ள ஒரு பதவியையும் உள்ளடக்கியுள்ளது. முதலீட்டு உதவியாளர் மற்றும் முகாமையாளர் போன்ற முக்கிய | நாங்கள் ஏற்கனவே 02 முதலீட்டு உதவியாளர்களையும் ஒரு சிரேஷ்ட முகாமையாளரையும் ஆட்சேர்ப்பு செய்துள்ளோம். ஏனைய ஆட்சேர்ப்பு இடம்பெற்று வருகிறது. | நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உகந்த பதவியணியினர் பேணப்பட வேண்டும். |

பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் கம்பனியின் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதில் நேரடியாக பாதிக்கலாம்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (1) | 2020-2022 செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2020 ஆம் ஆண்டில் புதிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை 70 ஆக அதிகரிப்பதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளது. இருப்பினும், ஆண்டின் இறுதியில், வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 29 ஆக மாத்திரமே அதிகரித்துள்ளது. வாடிக்கையாளர் தளத்தை அதிகரிப்பதற்கு, திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் கம்பனியால் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, ஊழியர்கள் roster அடிப்படையில் நாளாந்த செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து பணிபுரிந்தனர். மேலும், நாடு மூடப்பட்டமை காரணமாக ஏனைய செயற்பாடுகளை ஒருங்கிணைக்க மூன்றாம் தரப்பினரும் கிடைக்கவில்லை, எனவே, அனைவரும் பாதிக்கப்பட்டதால், NSB FMC ஆலும் திட்டமிட்டவாறு பணிகளை பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. அந்த சிரமங்களுடன், கம்பனி 2020 இல் 29 வாடிக்கையாளர்களை ஈர்த்திருந்தது. | கம்பனியின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு கம்பனி வருடாந்தம் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்த வேண்டும். |
| (அ) | 2019 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் வசதிக்காக மொபைல் செயலியை (Mobile app) அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ள போதிலும் அந் நோக்கத்திற்காக கம்பனி இன்னும் மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | (அ) தற்போதைய சூழ்நிலை காரணமாக செயன்முறையில் சில தாமதங்கள் ஏற்பட்டன. இருப்பினும், வாடிக்கையாளர் முகாமைத்துவ முறைமையை அமுல்ப்படுத்துவது செயன்முறையில் உள்ளது, அடுத்த ஆண்டில் இது மொபைல் செயலியாகப் பயன்படுத்தப்பட முடியும். | |
| (ஆ) | உள்ளக செயன்முறைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன், கம்பனி 2019 ஆம் ஆண்டுக்குள் ஒரு புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமையை பெற்றுக்கொள்ளவும், 2020 ஆம் ஆண்டளவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவை உருவாக்கவும் திட்டமிட்டிருந்த போதிலும் 2021 செப்தெம்பர் வரை கம்பனியால் மேற்படி நோக்கங்களை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | (ஆ) புதிய திறைசேரி முறைமையை அமுல்ப்படுத்துவதற்கான UAT செயன்முறையில் நாங்கள் இருக்கிறோம். (கொவிட் 19 நாடு மூடப்பட்ட சூழ்நிலையின் காரணமாக, முறைமைக்கு தொழில்நுட்ப நிபுணத்துவ உதவி ரிமோட் சேனல் மூலம் வழங்கப்படுகிறது (remote channel)).<br><br>தொலைநிலை ஆதரவுடன் | |

நேரலைக்குச் செல்வதற்கு முன் சில அபிவிருத்திகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதனால், தாமதம் ஏற்பட்டது. இருப்பினும், தற்போது UAT sign off இனை பூர்த்தி செய்து நேரலைக்கு வருவதற்கான கட்டத்தில் உள்ளது.
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவை உருவாக்குவது செயன்முறையில் உள்ளது, அந்த பிரிவை அமைப்பதற்கு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கிகாரத்தை கோரியுள்ளோம்.